மதுரை மாவட்டம்

நேரம் : 3 மணி
மதிப்பெண்கள் : 90

காலாண்டுத் தேர்வு - 2022
**கணக்குப்பதிவியல்**
பன்னிரெண்டாம் வகுப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் : (20 X 1 =20)

1. முழுமை பெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
(அ) நிறுமம் (இ) சிறிய அளவிலான தனியாள் வணிகம் (ஆ) அரசு (ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்
2. கீழ்க்கண்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு தொடர்பான எந்த விவரம் மொத்தக் கடனீந்தோர் கணக்கிற்கு மாற்றப்படுகிறது?
(அ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் தொடக்க இருப்பு (ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் இறுதி இருப்பு
(இ) அவ்வாண்டில் ஏற்கப்பட்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு (ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்கு ரொக்கம் செலுத்தியது
3. உரிமையாளரின் சொத்துகள் ரூ 85,000 மற்றும் பொறுப்புகள் ரூ 21,000 எனில் அவருடைய முதல் தொகை
(அ) ரூ 85,000 (ஆ) ரூ 1,06,000 (இ) ரூ 21,000 (ஈ) ரூ 64,000
4. பின்வருவனவற்றில் எது வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்படுவதில்லை?
(அ) பழைய செய்தித்தாள்கள் விற்றது (ஆ) சொத்து விற்பனை மீதான நட்டம்
(இ) செயலாளருக்கு வழங்கிய மதிப்பூதியம் (ஈ) அறைகலன் விற்ற தொகை
5. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
(அ) வருவாயின வரவு (ஆ) முதலின வரவு (இ) வருவாயினச் செலவு (ஈ) முதலினச் செலவு
6. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு
(அ) பெயரளவு கணக்கு (ஆ) சொத்து கணக்கு (இ) ஆள்சார்கணக்கு (ஈ) பிரதிநிதித்துவஆள்சார்கணக்கு
7. முதல் மீது வட்டி எதில் இருந்து கூட்டாளிகளுக்கு வழங்கப்படும்.
(அ) முதல் (ஆ) எடுப்பு (இ) இலாபம் (ஈ) நட்டம்
8. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது
(அ) சம்பளம் (ஆ) கழிவு (இ) கடன் மீது வட்டி (ஈ) முதல் மீது வட்டி
9. எடுப்பு மீது வட்டி, முதல் மீது வட்டி மற்றும் ஊதியம் கழித்த பின் உள்ள இலாபம் ரூ. 22,000. கீதா என்ற கூட்டாளி கழிவுக்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் 10% கழிவு பெற உரியவராயின் கழிவுத் தொகையை கண்டறியவும்.
(அ) ரூ 1,050 (ஆ) ரூ 2,000 (இ) ரூ 2,200 (ஈ) ரூ 1,500
10. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
(அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து (ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
(இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து (ஈ) நற்பெயரினை வாங்க முடியாது
11. வேறுபட்ட ஒன்றை தேர்ந்தெடுக்கவும்:
(அ) சராசரி இலாப முறை (ஆ) உயர் இலாப முறை (இ) நிலை முதல் முறை (ஈ) மூலதனமாக்க முறை
12. ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாப விகிதமாக கருதப்படுவது
(அ) சராசரி இலாபம் (ஆ) சாதாரண இலாப விகிதம் (இ) எதிர்நோக்கும் இலாப விகிதம் (ஈ) இவைகளில் ஏதுமில்லை
13. கீழ் வருவனவற்றில் எது சரியானது?
(அ) உயர் இலாபம் = மொத்தஇலாபம் / ஆண்டுகளின்எண்ணிக்கை (ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின்எண்ணிக்கை (இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்
(ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகள்
14. மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு
(அ) சொத்து க/கு (ஆ) பெயரளவு க/கு (இ) ஆள்சார் க/கு (ஈ) ஆள்சாரா க/கு
15. கூட்டாளியின் புதிய இலாபப்பகிர்வை விட பழைய இலாபப் பகிர்வு அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது
(அ) முதல் விகிதம் (ஆ) தியாகவிகிதம் (இ) ஆதாய விகிதம் (ஈ) இவற்றுள் எதுவுமில்லை
16. கூட்டாளி விலகலின் போது பொதுக்காப்பு மாற்றப்படுவது
(அ) அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு (ஆ) மறுமதிப்பீட்டுக் கணக்கிற்கு
(இ) தொடரும் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு (ஈ) நினைவுக்குறிப்பு மறுமதிப்பீட்டு கணக்கிற்கு
17. மறுமதிப்பீட்டில் பொறுப்பின் மதிப்பு உயர்வது
(அ) ஆதாயம் (ஆ) நட்டம் (இ) செலவு (ஈ) இவற்றுள் எதுவுமில்லை
18. ஒரு கூட்டாளி விலகலின் போது, ஆதாய விகிதத்தின் நிர்ணயம் எதற்கு தேவைப்படுகிறது?
(அ) மறுமதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம் மாற்றப்படுவதற்கு (ஆ) பகிர்ந்துதரா இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்தளிப்பதற்கு (இ) நற்பெயரை சரிக்கட்டுவதற்கு (ஈ) மேற்கண்டஎதுவுமில்லை
19. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 2:3:4 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர்.
தற்போது B விலகுகிறார். A மற்றும் C யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்
(அ) 4:3 (ஆ) 3:4 (இ) 2:1 (ஈ) 1:2
20. கீழ் வருவனவற்றில் எது சரியானது?
(அ) கூட்டாளி சேர்ப்பு – ஆதாய விகிதத்திற்கும்
(ஆ) கூட்டாளியாக விலகல் – தியாக விகிதத்திற்கும்
(இ) நற்பெயர் – கற்பனை சொத்து
(ஈ) இந்திய கூட்டாண்மை சட்டம் – 1932

பகுதி – II

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்: (வினா எண். 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) (7 X 2 =14)

21. முழுமைபெறா பதிவேடுகள் என்றால் என்ன?
22. இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள் தரவும்.
23. கூட்டாளி விலகல் என்றால் என்ன?
24. பின்வரும் விவரங்கள் வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின் இறுதிக்கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| மட்டைகள் மற்றும் பந்துகள் தொடக்கஇருப்பு | 3,000 |
| அவ்வாண்டில் வாங்கிய மட்டைகள் மற்றும் பந்துகள் | 17,000 |
| மட்டைகள் மற்றும் பந்துகள் இறுதி இருப்பு | 4,000 |

25. பிரகாஷ் மற்றும் சுப்ரியா என்ற இரு கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3 என்ற இலாப விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று அவர்களின் முதல் கணக்குகளின் இருப்புகள் பிரகாஷ் ரூ. 3,00,000 மற்றும் சுப்ரியா ரூ. 2,00,000 ஆகும். 2018, ஜுலை 1 அன்று பிரகாஷ் கூடுதல் முதலாக ரூ.60,000 கொண்டு வந்தார். 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% எனக் கணக்கிடவும்.
26. ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு:
2014: ரூ. 10,000; 2015: ரூ. 11,000; 2016: ரூ. 12,000; 2017: ரூ. 13,000 மற்றும் 2018: ரூ. 14,000, 5 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
27. அருள் மற்றும் அனிதா என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 4:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 31.3.2018 அன்று புதிய கூட்டாளியாக அஜய் என்பவர் சேர்த்து கொள்ளப்பட்டார். சேர்க்கையின் போது, நிறுவன ஏடுகளில் பொதுக்காப்பு ரூ.42,000 எனக்காட்டியது. பொதுக்காப்பினை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.
28. பிரவீணா மற்றும் தான்யா என்ற இரு கூட்டாளிகள் 7:3 என்ற இலாப விகிதத்தில் இலாபத்தைப்

www.Padasalai.Net

பகிர்ந்து வந்தனர். அவர்கள் மாலினி என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். பிரவீணா, தான்யா மற்றும் மாலினி அவர்களின் புதிய இலாப விகிதம் 5:2:3. தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

29.ரோஸி, ரதி மற்றும் இராணி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்கள் மற்றும் நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 1.1.2018 அன்று, ரதி கூட்டாண்மையிலிருந்து விலகினார். அந்நாளைய இருப்புநிலைக்குறிப்பின் சொத்துகள் பக்கம் ரூ.45,000 பகிர்ந்துத்தரா நட்டங்கள் இருப்பைக் காட்டியது. பகிர்ந்துதரா நட்டத்தை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

30.கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| ஆண்டின் தொடக்க முதல் (ஏப்ரல்1, 2018) | 5,00,000 |
| ஆண்டின் இறுதி முதல் (மார்ச் 31, 2019) | 8,50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 1,20,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 70,000 |

## பகுதி – III

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும் : (வினா எண்: 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்). (7 X 3 = 21)

31. பின்வரும் விவரங்களிலிருந்து அவ்வாண்டில் மேற்கொண்ட மொத்த விற்பனையை கண்டறியவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று கடனாளிகள் | 1,30,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது | 4,20,000 |
| விற்பனைத்திருப்பம் | 35,000 |
| வாராக்கடன் | 15,000 |
| 2018, டிசம்பர் 31 அன்று கடனாளிகள் | 2,00,000 |
| ரொக்க விற்பனை | 4,60,000 |

32. பின்வரும் விவரங்கள் ஒரு மன்றத்தின் 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டவும். அந்த மன்றம் 2016-2017 ஆம் ஆண்டில் பெற்ற சந்தா ரூ.40,000. இதில் 2015-2016 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ரூ.5,000 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ரூ.3,000 உள்ளடங்கியுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ரூ.1,000 இன்னும் பெற வேண்டியுள்ளது.

33.கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ரூ. 2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்பட வேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர்

(i) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால் (ii) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்

(iii) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

34. சீனு மற்றும் சிவா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். சுப்பு என்பவரை புதிய கூட்டாளியாக சேர்க்கும் போது அவர்கள் பின்வரும் முடிவுகள் எடுத்தனர்.
(i) கட்டடம் மதிப்பினை ரூ. 40,000 உயர்த்த வேண்டும். (ii) கணக்கேடுகளில் இதுவரை பதியப்படாத ரூ.10,000 மதிப்புள்ள முதலீடுகளை கணக்கில் கொண்டு வர வேண்டும். (iii) இயந்திரம் மதிப்பு ரூ. 14,000 மற்றும் அறைகலன் மதிப்பு ரூ. 12,000 குறைக்க வேண்டும். (iv) பற்பல கடனீந்தோரில் ரூ.16,000 போக்கெழுத வேண்டும்.
மறுமதிப்பீட்டுக் கணக்கு தயார் செய்யவும்.

35.சாம் மற்றும் போஸ் என்னும் கூட்டாளிகள் 3:2 என்னும் விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று ஆகாக்ஷ என்பவரை கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். ஆகாக்ஷ கூட்டாண்மையில் சேர்ந்த அன்று நிறுவன ஏடுகளில் நற்பெயர் 30,000 ஆக இருந்தது. மாறுபடும் முதல் முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுவதாகக் கருதி கூட்டாளிகளின் பின்வரும் முடிவுகளின் படி குறிப்பேட்டுப்பதிவுகளைத் தரவும். (அ) ஏட்டில் உள்ள நற்பெயர் தொகை முழுவதையும் போக்கெழுதுவது

(ஆ) ஏட்டில் உள்ள நற்பெயரில் 20,000-ஐ போக்கெழுதுவது

36. ஜனனி, ஜானகி, மற்றும் ஜமுனா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்கள் மற்றும் நட்டங்களை முறையே 3:3:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2017, டிசம்பர் 31 அன்று ஜானகி இறந்து விட்டார். அவருக்குச் செலுத்த வேண்டிய தொகை ரூ. 1,40,000 என வரவிருப்பைக் காட்டியது. கீழ்க்கண்ட நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(i) செலுத்த வேண்டிய தொகை காசோலை மூலம் உடனடியாகச் செலுத்தப்பட்டது.

(ii) செலுத்த வேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை.

(i) உடனடியாக ரூ. 75,000 காசோலை மூலம் செலுத்தப்பட்டது, மீதித்தொகை இன்னும் செலுத்தப்பட வேண்டி உள்ளது.

37. நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

38. நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.

39. தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

40. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

## பகுதி – IV

V. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்: (7 X 5 = 35)

41.(அ) ராஜு முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| விவரம் | 1.1.2018 ரூ. | 31.12.2018 ரூ. |
|---|---|---|
| கை ரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 2,70,000 | 3,00,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ரூ. 50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ரூ. 2,500 எடுத்துக் கொண்டார். இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும். (அல்லது)

(ஆ) அருளப்பன் மற்றும் நல்லசாமி இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாப நட்டங்களை 4:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2018, ஜனவரி 1 அன்று அவர்களுடைய முதல் முறையே ரூ. 20,000 மற்றும் ரூ. 10,000. கூட்டாண்மை ஒப்பாவணம் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறது:

(அ) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5 % அனுமதிக்க வேண்டும்.

(ஆ) அருளப்பன் மற்றும் நல்லசாமி இருவருக்கும் விதித்த எடுப்புகள் மீதான வட்டி முறையே ரூ. 200 மற்றும் ரூ. 300 ஆகும்.

(இ) முதல் மீது வட்டி மற்றும் எடுப்புகள் மீதான வட்டி கழிப்பதற்கு முன் உள்ள நிறுவனத்தின் நிகர இலாபம் ரூ. 18,000.

கூட்டாளிகளுடைய முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும் மற்றும் 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இலாப நட்டப் பகிர்வு கணக்கையும் தயார் செய்யவும்.

42.(அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும்.

www.Padasalai.Net

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| 1.1.2018, அன்று பற்பல கடனீந்தோர் | 30,000 | 1.1.2018,அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 25,000 |
| கொள்முதல் திருப்பம் | 15,000 | கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது | 1,20,000 |
| ரொக்கக் கொள்முதல் | 2,25,000 | 31.12.2018 அன்று கடனீந்தோர் | 25,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்குச் செலுத்தியது | 30,000 | 31.12.2018 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |

(அல்லது)

(ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து, உயர் இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) பயன்படுத்தப்பட்ட முதல் : ரூ. 1,20,000 (ஆ) சாதாரண இலாப விகிதம் : 20%

(இ) 5 ஆண்டுகளுக்குரிய நிகர இலாபம் : 2014: ரூ. 30,000; 2015: ரூ. 32,000; 2016: ரூ. 35,000; 2017: ரூ. 37,000 மற்றும் 2018: ரூ. 40,000 (ஈ) கூட்டாளிகளுக்கான உழைப்பூதியம் ஆண்டுக்கு ரூ. 2,000.

43.(அ) கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப் பற்று (1.4.2018) | 6,000 | கடன் மீதான வட்டி செலுத்தியது | 2,000 |
| கை ரொக்கம் (1.4.2018) | 1,000 | நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் | 700 |
| கூலி செலுத்தியது | 2,000 | விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 2,600 |
| சந்தாபெற்றது:<br>முந்தைய ஆண்டு 500 | | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 1,900 |
| நடப்பு ஆண்டு 9,600 | | விளையாட்டுப் போட்டிநிதி வரவுகள் | 5,200 |
| எதிர்வரும் ஆண்டு 400 | 10,500 | உயில்கொடைப் பெற்றது | 2,000 |
| மதிப்பூதியம் செலுத்தியது | 2,800 | ரொக்கஇருப்பு (31.3.2019) | 300 |
| கூலி கொடுபட வேண்டியது | 2,200 | அரங்கம் அமைப்பதற்காக பெற்ற நன்கொடை | 2,000 |

(அல்லது)

(ஆ) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு:

(i) ஈட்டிய இலாபங்கள்: 2016: ரூ. 25,000; 2017: ரூ. 23,000 மற்றும் 2018: ரூ. 26,000.

(ii) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ. 2,500 சேர்ந்துள்ளது.

(iii) சரக்கிருப்புதீயினாலசேதமடைந்ததால்2017ஆம்ஆண்டினஇலாபத்தில்ரூ.3,500 குறைக்கப்பட்டது.

(iv) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால் எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ரூ. 250 என மதிப்பிடப்பட்டது.

3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

44.(அ) கீழ்க்காணும் கும்பகோணம் கூடைப்பந்து சங்கத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ: | | மைதான வாடகை செலுத்தியது | 12,000 |
| கை ரொக்கம் 23,000 | 35,000 | அச்சுக்கட்டணம் | 5,000 |
| வங்கி ரொக்கம் 12,000 | | கட்டடம் மீதான காப்பீடு | 2,000 |
| சந்தா பெற்றது | 9,000 | வங்கிக் கட்டணம் | 1,000 |
| பாதுகாப்புபெட்டக வாடகைபெற்றது | 2,000 | தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவு | 16,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | 7,000 | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 4,000 |
| அரங்க வாடகை பெற்றது | 6,000 | தணிக்கைக்கட்டணம் | 3,000 |
| | | இருப்பு கீ/இ:<br>கை ரொக்கம் 2,000<br>வங்கி ரொக்கம் 14,000 | 16,000 |
| | 59,000 | | 59,000 |

(அல்லது)

(ஆ) ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் சரண், அருண் மற்றும் கரண் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 4:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2016, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கட்டடம் | 60,000 |
| சரண் | 60,000 | | இயந்திரம் | 40,000 |
| அருண் | 50,000 | | இலாபநட்டக/கு | 20,000 |
| கரண் | 40,000 | 1,50,000 | சரக்கிருப்பு | 12,000 |
| பொதுக்காப்பு | | 15,000 | கடனாளிகள் 25,000<br>கழிக்க: வாராக்கடன் ஒதுக்கு 1000 | 24,000 |
| கடனீந்தோர் | | 25,000 | வங்கிரொக்கம் | 44,000 |
| தொழிலாளர் ஈட்டு நிதி | | 10,000 | | |
| | | 2,00,000 | | 2,00,000 |

1.1.2017 அன்று கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கரண் விலகினார். (i) நிறுவனத்தின் நற்பெயர் ரூ.21,000 என மதிப்பிடப்பட்டது. (i) மறுமதிப்பீட்டு இலாபம் ரூ.21,000 (ii) கரணுக்கு செலுத்த வேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை. கூட்டாளி விலகலுக்குப் பின் உள்ள முதல் கணக்கினை செய்யவும்.

45.(அ) பிரகதீஷ் மற்றும் நரேஷ் ஆகிய கூட்டாளிகள் தங்கள் முதல் கணக்குகளை நிலைமுதல் முறையில் பராமரித்து வருகின்றனர். கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு கூட்டாளிகளின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்:

| விவரம் | பிரகதீஷ் | நரேஷ் |
|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று முதல் | 4,00,000 | 6,00,000 |
| 2018, ஏப்ரல் 1 நடப்புக் கணக்கு | 20,000(வ) | 15,000(ப) |
| கூடுதல் முதல் | 50,000 | |
| எடுப்புகள் | 45,000 | 60,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 2,000 | 3,000 |
| இலாபப் பங்கு | 80,000 | 1,20,000 |
| முதல் மீது வட்டி | 20,000 | 30,000 |
| கழிவு | 17,000 | ---- |
| ஊதியம் | ----- | 38,000 |

(அல்லது)

(ஆ) சுந்தர், விவேக, மற்றும் பாண்டியன் என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 3:2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். அவர்களின் 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு:

www.Padasalai.Net

2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | நிலம் | 80,000 |
| சுந்தர் 50,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| விவேக் 40,000 | | கடனாளிகள் | 30,000 |
| பாண்டியன் 10,000 | 1,00,000 | வங்கிரொக்கம் | 14,000 |
| பொதுக்காப்பு | 36,000 | இலாப நட்டக் க/கு (நட்டம்) | 6,000 |
| பற்பல கடனீந்தோர் | 14,000 | | |
| | 1,50,000 | | 1,50,000 |

1.1.2019 அன்று பாண்டியன் இறந்து விட்டார் மற்றும் அவரின் இறப்பின் போது பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட்டன. (i) சரக்கிருப்பின் மதிப்பு 10% தேய்மானம் குறைக்கப்பட வேண்டும். (ii) நிலத்தின் மதிப்பு ரூ. 11,000 அதிகரிக்கப்பட வேண்டும். (iii) கடனாளிகள் மதிப்பு ரூ. 3,000 குறைக்க வேண்டும். (iv) பாண்டியனுக்கு செலுத்த வேண்டிய இறுதித் தொகை செலுத்தப்படவில்லை. (v) மறுமதிப்பீட்டு இலாபம் : ரூ. 6,000

கூட்டாளியின் இறப்பிற்கு பின் கூட்டாளிகள் முதல் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

46.(அ) ஆகாஷ், பாலா, சந்துரு மற்றும் டேனியல் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத போது பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?

(i) ஆகாஷ் என்பவர் அதிக முதல் வழங்கியுள்ளார். அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 10% கோருகிறார்.

(ii) பாலா ஒவ்வொரு மாதமும் ரூ. 3,000 எடுத்துக் கொள்கிறார். ஏனைய கூட்டாளிகள் பாலாவிடம் ஆண்டுக்கு 8% எடுப்புகள் மீது வட்டி நிறுவனத்திற்கு அளிக்குமாறு கேட்கிறார்கள். ஆனால், பாலா அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

(iii) ஆகாஷ், இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறார். ஆனால் பிற கூட்டாளிகள் அதனை ஒப்புக் கொள்ளவில்லை. (iv) டேனியல் தனது முழு நேரத்தையும் தொழிலில் செலவிடுவதால் அவர் ஒவ்வொரு மாதமும் ரூ. 10,000 ஊதியம் வேண்டுமென்று கோருகிறார்.

(v) சந்துருவால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் ரூ. 50,000. அவர் கடன் மீது வட்டி ஆண்டுக்கு 12% வேண்டுமென்று கோருகிறார். (அல்லது)

(ஆ) சாய் மற்றும் சங்கர் இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அந்நிறுவனத்தின் 2017 டிசம்பர் 31 ஆம் இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | கட்டடம் | | 34,000 |
| சாய் 48,000 | | அறைகலன் | | 6,000 |
| சங்கர் 40,000 | 88,000 | முதலீடுகள் | | 20,000 |
| கடனீந்தோர் | 37,000 | கடனாளிகள் | 40,000 | |
| கொடுபடவேண்டிய கூலி | 8,000 | கழிக்க: வாராக்கடன் ஒதுக்கு | 3,000 | 37,000 |
| | | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | 12,000 |
| | | சரக்கிருப்பு | | 16,000 |
| | | வங்கி | | 8,000 |
| | 1,33,000 | | | 1,33,000 |

2017, டிசம்பர் 31 இல் சண்முகம் என்பவர் 1/4 இலாபப்பகிர்வு விகிதத்தில் கூட்டாண்மையில் சேருகிறார். அவர் பின்வரும் சரிகட்டுதலுக்குட்பட்டு ரூ. 12,000 முதலாக கொண்டு வருகிறார்.

(அ) அறைகலன் ரூ. 5,000 மற்றும் கட்டடம் ரூ. 50,000 ஆகவும் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ. 5,500 ஆக உயர்த்த வேண்டும். (இ) பதிவுறாத ரூ. 6,000 மதிப்புள்ள முதலீடு கணக்கில் கொண்டுவரப்பட வேண்டும். (ஈ) பதிவுறாத ரூ. 2,500 மதிப்புள்ள பொறுப்பு பதிவு செய்யப்பட வேண்டும்.

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின் உள்ள முதல் கணக்கினை செய்யவும்.

47.(அ) ரகு மற்றும் சாம் எனும் கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2017 மார்ச் 31 அன்று அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | இயந்திரம் | | 30,000 |
| ரகு 40,000 | | அறைகலன் | | 10,000 |
| சாம் 30,000 | 70,000 | சரக்கிருப்பு | | 10,000 |
| கடனீந்தோர் | 30,000 | கடனாளிகள் | 21,000 | |
| | | கழிக்க: வாராக்கடன் ஒதுக்கு | 1,000 | 20,000 |
| | | வங்கி | | 30,000 |
| | 1,00,000 | | | 1,00,000 |

1.4.2017 அன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பிரகாஷ் என்பவரை கூட்டான்மையில் சேர்த்தனர்.

(அ) பிரகாஷ் ரூ. 10,000 முதல் கொண்டு வருவது (ஆ) இயந்திரம் ரூ. 24,000 என மதிப்பிடப்பட்டது

(இ) அறைகலனின் மதிப்பில் ரூ. 3,000 குறைப்பது (ஈ) வாரா ஐயக்கடன் ஒதுக்கை ரூ. 3,000 என அதிகரிப்பது

(உ) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள கணக்குகளின் மூலம் பெறவேண்டியவைகள் மதிப்பு ரூ. 1,000 பதிவு செய்தல். குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டு கணக்கு தயாரிக்கவும். (அல்லது)

(ஆ) சேலம் பொழுதுபோக்கு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு பின்வருமாறு.

2019, மார்ச் 31 ஆம் நாடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு.

| ப பெறுதல்கள் | ரூ. | வ செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | அறைகலன் | 27,500 |
| கைரொக்கம் | 9,000 | எழுதுபொருள்கள் | 2,400 |
| சந்தா | | அஞ்சல் செலவுகள் | 1,000 |
| 2018 – 2019 12,500 | | இருப்பு கீ/இ | |
| 2019 – 2020 400 | 12,900 | கைரொக்கம் | 3,500 |
| பொழுதுபோக்குமூலமாக பெற்ற வருமானம் | 12,000 | | |
| பல்வகை வரவுகள் | 500 | | |
| | 34,400 | | 34,400 |

கூடுதல் தகவல்கள்:

(i) மன்றத்தில் 450 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டு சந்தா ரூ. 30 செலுத்துகின்றனர்.

(ii) எழுதுபொருள்கள் இருப்பு 2018, மார்ச் 31-ல் ரூ. 300 மற்றும் 2019, மார்ச் 31-ல் ரூ. 500.

(iii) 2018, ஏப்ரல் 1 அன்று முதல்நிதி ரூ. 9,300.

2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான வருவாய் மற்றும் செலவினக் கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

**+2 கணக்குப்பதிவியல் காலாண்டுத்தேர்வு செப்- 22**

**சரியான விடை 20X1=20**

1. (இ) சிறிய அளவிலான தனியாள் வணிகம்
2. (இ) அவ்வாண்டில் ஏற்கப்பட்ட செமாசீ
3. (ஈ) ரூ 64000
4. (ஈ) அறைகலன் விற்ற தொகை
5. (ஆ) முதலின வரவு
6. (ஆ) சொத்து க/கு
7. (இ) இலாபம்
8. (இ) கடன் மீது வட்டி
9. (ஆ) ரூ 2000
10. (அ) நற்பெயர் ஒரு புலனாகா சொத்து
11. (இ) நிலைமுதல் முறை
12. (ஆ) சாதாரண இலாப விகிதம்
13. (இ)உயர்இலாபம்=சராசரிஇலாபம்-சாதாரணஇலாபம்
14. (ஆ) பெயரளவு கணக்கு
15. (ஆ) தியாக விகிதம்
16. (அ) அனைத்து கூட்டாளிகளின் முதல்கணக்கு
17. (ஆ) நட்டம்
18. (இ) நற்பெயரை சரிக்கட்டுவதற்கு
19. (ஈ) 1:2
20. (ஈ) இந்திய கூட்டாண்மை சட்டம் 1932

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. முழுமை பெறா பதிவேடுகள்:** இரட்டைப்பதிவு முறையின் படி பராமரிக்கப்படாத பதிவேடுகள் முழுமைபெறா பதிவேடுகள் எனப்படும். இதில் ரொக்க கணக்கு மற்றும் ஆள்சார் கணக்குகள் பதியப்படும்.

**22. இலாப நோக்கமற்ற அமைப்பின் பொருள்** இலாபம் நோக்கம் இல்லாமல் பொது மக்களுக்கு சேவை நோக்கத்தோடு செயல்படக்கூடிய நிறுவனங்களுக்கு இலாப நோக்கமற்ற அமைப்பு என்று பெயர். எகா:- கலை, பண்பாடு மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அமைப்புகள், அறக்கொடை, கல்வி, மருத்துவமனை, மனமகிழ் மன்றம் மற்றும் நூலகம் போன்ற நிறுவனங்கள்.

**23. கூட்டாளி விலகல்:** கூட்டாண்மையிலிருந்து கூட்டாளி ஒருவர் வெளியே சென்றால் அது கூட்டாளி விலகல் எனப்படும். காரணங்கள்:- உடல்நிலை பாதிப்பு, முதுமை, கருத்து வேறுபாடுகள் முதலியன கூட்டாளி விலகுவதற்கான காரணங்களாகும்.

**24. வேதாரண்யம் விளையாட்டு வருவாய் செலவினக்கணக்கு**

| செலவுகள் | தொ | தொ | வரு | ெ | ெ |
|---|---|---|---|---|---|
| பந்து மட்டைகள் தொ.இ | 3000 | | விற் | 2000 | |
| கூட்:- நடப்பாண்டில் வாங்கி | 17000 | | | | |
| | 20000 | | | | |
| கழி:- விளை.பொ.இறுதி இ | 4000 | | | | |
| | | 16000 | | | |

**வேதாரண்யம் விளையாட்டு இருப்புநிலைக்குறிப்பு**

| பொறுப்பு | | தொ | வருமானம் | தொ | தொகை |
|---|---|---|---|---|---|
| | | | பந்து ம இறுதி இ | | 4000 |

**25.** பிரகாஷின் முதல் மீது வட்டி

தொடக்க முதல் = 300000 x 6/100 = 18000

கூடுதல் முதல் (9 மாதம்) = 60000 x 6/100 = 2700

20700

சுப்ரியா முதல் மீது வட்டி

தொடக்க முதல் = 200000 x 6/100 = 12000

| **26. ஆண்டு** | **இலாபம்** |
|---|---|
| 2014 | 10000 |
| 2015 | 11000 |
| 2016 | 12000 |
| 2017 | 13000 |
| 2018 | 14000 |
| **மொத்தம்** | **60000** |

சராசரி இலாபம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

= $\frac{60000}{5}$ = ரூ 12000

**நற்பெயர் = சராசரி இலாபம் X கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை**

= 12000 X 2 **= ரூ 24000**

**27. குறிப்பேட்டுப் பதிவுகள்**

| **விவரம்** | **பற்று ரூ** | **வரவு ரூ** |
|---|---|---|
| பொதுக்காப்பு க/கு ப. | 42000 | |
| அருள்முதல் க/கு | | **24000** |
| அனிதாமுதல் க/கு | | **18000** |

**28.** தியாகப் பங்கு = பழைய பங்கு – புதியப் பங்கு

| | பிரவீணா | தான்யா | மாலினி |
|---|---|---|---|
| பழைய பங்கு | $\frac{7}{10}$ | $\frac{3}{10}$ | |
| புதிய பங்கு | $\frac{5}{10}$ | $\frac{2}{10}$ | $\frac{3}{10}$ |
| தியாகப் பங்கு | $\frac{7}{10}-\frac{5}{10}=\frac{2}{10}$ | $\frac{3}{10}-\frac{2}{10}=\frac{1}{10}$ | |

**தியாகப் பங்கு = 2:1**

**29.** குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| | ரோசி முதல் க/கு ப | 15000 | |
| | ரதி முதல் க/கு ப | 15000 | |
| | இராணி முதல் க/கு ப | 15000 | |
| | இலாப நட்ட க/கு | | 45000 |

**30. இலாப நட்ட அறிக்கை**

| | |
|---|---|
| இறுதி முதல் (31.03.2019) | 8,50,000 |
| கூட்டுக:- எடுப்புகள் | 70,000 |
| | 920000 |
| கழிக்க:- கூடுதல் முதல் | 120000 |
| சரிக்கட்டப்பட்ட இ.முதல் | 800000 |
| கழிக்க:- தொடக்க முதல் | 500000 |
| **இலாபம்** | **300000** |

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31. மொத்தக் கடனாளிகள் கணக்கு**

| விவரம் | தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|
| இருப்புகீ/கொ | 130000 | ரொக்க க/கு | 420000 |
| **கடன் விற்பனை க/கு** | **540000** | உள்திருப்பக்க/கு | 35000 |
| | | வாராக்கடன்க/கு | 15000 |
| | | இருப்புகீ/இ | 200000 |
| | 670000 | | 670000 |

மொத்த விற்பனை = ரொக்க விற்பனை + கடன் விற்பனை

**460000 + 540000 = ரூ 1000000**

**32. 2017 மார்ச் வருவாய் செலவினக் கணக்கு**

| **செ** | **தொ** | **தொ** | **வருமானம்** | **தொகை** | **தொகை** |
|---|---|---|---|---|---|
| | | | 2017 பெ.சந்தா | 40000 | |
| | | | (-)15-16. சந்தா | 5000 | |
| | | | | 35000 | |
| | | | (-) 17-18 சந்தா | 3000 | |
| | | | | 32000 | |
| | | | **(-) பெ.சந்தா** | **1000** | **33000** |

www.Padasalai.Net

### இருப்புநிலைக்குறிப்பு

| பொறுப்புகள் | ரூ | தொ | சொத்துக் | | தொகை |
|---|---|---|---|---|---|
| 17-18ச.மு.பெ | | 3000 | 16-17 பெ.வே.ச | | 1000 |

**33.** 1) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்

2500 X 12 =30000 x 4/100 x6.5/12 = ரூ 650

2) ஒவ்வொரு மாத இடையில் தொடக்கத்தில் எடுத்திருந்தால்

2500 X 12 = 30000 x 4/100 x6/12 = ரூ 600

3) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

2500 X 12= 30000 x 4/100 x5.5/12 = ரூ 550

**34.** **மறுமதிப்பீடு க/கு**

| விவரம் | தொ | விவரம் | தொ |
|---|---|---|---|
| அறைகலன் க/கு | 12000 | கட்டிடம் க/கு | 40000 |
| இயந்திரம் க/கு | 14000 | முதலீடுகள் க/கு | 10000 |
| **மறுமதிப்பீடு லாபம்**<br>சீனு முதல் 25000<br>சிவா முதல் 15000 | **40000** | கடனீந்தோர் க/கு | 16000 |
| | **66000** | | **66000** |

**35.** **குறிப்பேட்டுப் பதிவு**

| | | | |
|---|---|---|---|
| சாம் முதல் க/கு | ப | 18000 | |
| ஜோஸ் முதல் க/கு | ப | 12000 | |
| நற்பெயர் க/கு | | | 30000 |
| சாம் முதல் க/கு | ப | 12000 | |
| ஜோஸ் முதல் க/கு | ப | 8000 | |
| நற்பெயர் க/கு | | | 20000 |

**36.** **குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| | ஜானகியின் நிறைவேற் க/கு ப<br>வங்கி க/கு | 140000 | <br>140000 |
| | ஜானகியின் நிறைவேற் க/கு ப<br>ஜானகியின் கடன்க/கு | 140000 | <br>140000 |
| | ஜானகியின் நிறைவேற் க/கு ப<br>வங்கி க/கு<br>ஜானகியின் நிறைவேற் கடன்க/கு | 140000 | <br>75000<br>65000 |

| 37. அடிப்படை | நிலை முதல் | மாறுபடும் முதல் |
|---|---|---|
| **கணக்கின் எண்ணிக்கை** | இரண்டு கணக்குகள் 1. முதல் க/கு 2. நடப்பு க/கு | ஒரே ஒரு கணக்கு. முதல் கணக்கு மட்டும். |
| **முதல் தொகையில் மாற்றம்** | முதல் மாறாது (கூடுதல் அல்லது நிரந்தர எடுப்பின் போது மட்டும் மாறும்.) | முதல் தொகை மாறும் |
| **இறுதி இருப்பு** | முதல் க/கு வரவு இருப்பு மட்டும் நடப்பு க/கு பற்று அல்லது வரவு இருப்பைக் காட்டும் | எப்போதும் முதல் க/கு வரவு இருப்பாகும் |
| **சரிக்கட்டுதல்கள்** | அனைத்து சரிக்கட்டுதல்களும் நடப்பு கணக்கில் சரி செய்யப்படும். | அனைத்து சரிக்கட்டுதல்களும் முதல்கணக்கில் சரிசெய்யப்படும். |

**38. நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகள்:** எதிர்காலத்தில் இலாபம் ஈட்டும் திறன் கொண்ட நிறுவனம்.

**நிறுவனத்தின் அமைவிடம்:-** வாடிக்கையாளர் அதிகம் சென்றடைக்கூடிய இடம்.

**நிறுவனத்தின் கால அளவு:-** போட்டிகள் இல்லாத அல்லது போட்டி குறைவான நிறுவனம்.

**போட்டியின் அளவு:-** போட்டிகள் இல்லாத அல்லது போட்டி குறைவான நிறுவனம்.

**பிற காரணிகள்:-** உரிமையாளரின் பிரபலம், விளம்பரம் போன்றவைகள். திறமை மிகு மேலாண்மை.

| 39. அடிப்படை | தியாக விகிதம் | ஆதாய விகிதம் |
|---|---|---|
| **பொருள்** | புதிய கூட்டாளிக்கு பழைய கூட்டாளிகள் தியாகம் செய்யும் இலாப பங்கு | தொடரும் கூட்டாளிகள் விலகும் கூட்டாளிகளிடமிருந்து பெறும் ஆதாய பங்கு |
| **நோக்கம்** | தியாகம் செய்யும் கூட்டாளிக்கு நற்பெயர் தொகையை சரிசெய்ய | ஆதாயம் பெறும் கூட்டாளிக்கு நற்பெயர் தொகையை சரி செய்ய |
| **கணக்கிடும் காலம்** | கூட்டாளி சேர்ப்பின் போது | கூட்டாளி விலகும் போது |
| **முறை** | தியாக விகிதம் = பழைய விகிதம் - புதிய விகிதம் | ஆதாய விகிதம் = புதிய விகிதம் - பழைய விகிதம் |

| 40. அடிப்படை | பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு | வருவாய் செலவினக் கணக்கு |
|---|---|---|
| **நோக்கம்** | ரொக்கம் பெறுதல்கள் செலுத்தல்களை அறிய | உபரி அல்லது பற்றாக்குறையை அறிய |
| **கணக்கின் தன்மை** | சொத்துக் கணக்கு | பெயரளவு கணக்கு |
| **கணக்கின் அடிப்படை** | ரொக்கத்தின் அடிப்படையில் | நிகழ்வின் அடிப்படையில் |
| **தொடக்கம் மற்றும் இறுதி இருப்பு** | ரொக்கம் மற்றும் வங்கி தொடக்க இருப்புடன் தொடங்கிக இறுதி இருப்புடன் முடியும். | உபரி அல்லது பற்றாக்குறையுடன் முடிவடையும். |
| **நடவடிக்கையின் தன்மைகள்** | வருவாயின் முதலின வேறுபாடுகள் இல்லை. | வருவாயின நடவடிக்கைகள் மட்டும் வரும். |
| **காலம்** | கடந்த, நடப்பு மற்றும் எதிர்வரும் ஆண்டு பெறுதல் செலுத்தல்கள் பதியப்படும். | நடப்பு ஆண்டுக்குறிய நடவடிக்கைகள் மட்டும் பதியப்படும். |

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X3=21**

**41.அ. (தொடக்க முதல் கணக்கிடுதல்)**

| பொறுப்புகள் | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 270000 | ரொக்கம் | 80000 |
| | | சரக்கிருப்பு | 180000 |
| | | கடனாளிகள் | 90000 |
| **முதல்** | **250000** | பொ.இயந்திரம் | 170000 |
| | 520000 | | 520000 |

www.Padasalai.Net

**(இறுதி முதல் கணக்கிடுதல்)**

| பொறுப்புகள் | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 300000 | ரொக்கம் | 90000 |
| | | சரக்கிருப்பு | 140000 |
| | | கடனாளிகள் | 200000 |
| **முதல்** | **300000** | பொ.இயந்திரம் | 170000 |
| | 600000 | | 600000 |

**இலாப நட்ட அறிக்கை**

| | |
|---|---|
| இறுதி முதல் | 300000 |
| கூட்டுக:- எடுப்புகள் (2500 X 12) | 30000 |
| | 330000 |
| கழிக்க:- கூடுதல் முதல் | 50000 |
| சரிக்கட்டப்பட்ட இ.முதல் | 280000 |
| கழிக்க:- தொடக்க முதல் | 250000 |
| **இலாபம்** | **30000** |

**41.ஆ. குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| 18மா | முதல் மீது வட்டி க/கு ப | 1500 | |
| 31 | அருளப்பன் முதல் க/கு | | 1000 |
| | நல்லசாமி முதல் க/கு | | 500 |
| | இலாப நட்ட பகிர்வு க/கு ப | 1500 | |
| | முதல் மீதான வட்டி க/கு | | 1500 |
| 18டி | அருளப்பன் முதல் க/கு ப | 200 | |
| 31 | நல்லசாமி முதல் க/கு ப | 300 | |
| | எடுப்பு மீதான வட்டி க/கு | | 500 |
| | எடுப்பு மீதான வட்டி க/கு ப | 500 | |
| | இலாப நட்ட பகிர்வு க/கு | | 500 |
| | இலாப நட்ட பகிர்வு க/கு ப | 17000 | |
| | அருளப்பன் முதல் க/கு | | 13600 |
| | நல்லசாமி முதல் க/கு | | 3400 |

**2018 டிசம்பர்31ம் நாளோடு முடிவடையும் இலாப நட்ட பகிர்வு கது**

| விவரம் | தொ | தொ | விவரம் | தொகை |
|---|---|---|---|---|
| மு.மீது.வட்டி | | | இலாப நட்டகது | 18000 |
| அருளப்பன் | | 1000 | எடுப்பு மீதானவ | |
| நல்லசாமி | | 500 | அருளப்பன் | 200 |
| கூட்டாளி முதல் | | | நல்லசாமி | 300 |
| **அருளப்பன்** | **13600** | | | |
| **நல்லசாமி** | **3400** | **17000** | | |
| | | **18500** | | **18500** |

**42.அ.** செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

| விவரம் | தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|
| ரொக்க க/கு | 30000 | இருப்புகீ/கொ | 25000 |
| இருப்புகீ/இ | 20000 | **கடனீந்தோர்க/கு** | **25000** |
| | 50000 | | 50000 |

மொத்த கடனீந்தோர் கணக்கு

| விவரம் | தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|
| ரொக்க க/கு | 120000 | இருப்புகீ/கொ | 30000 |
| கொ.திருப்ப க/கு | 15000 | **கொள்முதல் க/கு** | **155000** |
| | 25000 | | |
| செ.மா.சீ. கது (மறுக்கப்பட்டது) | 25000 | | |
| இருப்புகீ/இ | | | |
| | 185000 | | 185000 |

மொத்த கொள்முதல் = ரொ.கொள்முதல்+ க. கொள்முதல்

225000 + 155000 = **ரூ380000**

**42.ஆ.** சராசரி லாபம் = மொத்த லாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

= 30000+32000+35000+37000+40000 / 5 = 174000 / 5 = **34800**

உழைப்பூதியம் முன் சராசரி லாபம் = 34800 – 2000 = **32800**

சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் X சாதாரண லாப விகிதம்

= 120000X 20/100 = **24000**

உயர் இலாபம் = சராசரிஇலாபம் - சாதாரணலாபம்

= 32800 - 24000 = **8800**

நற்பெயர் = உயர்லாபம் X கொ.ஆ.எ = 8800 X 5 = **ரூ44000**

**43.அ. கோயமுத்தூர் கிரிக்கெட் பெறுதல் செலுத்தல் கணக்கு**

| பெறுதல்கள் | | தொ | செலுத்தல்கள் | தொ |
|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | இருப்பு கீ/கொ | |
| கை ரொக்கம் | | 1000 | வ.மே.பற்று | 6000 |
| சந்தா பெற்றது | | | கூலி | 2000 |
| முந்தைய ஆண்டு | 500 | | கடன் மீ.வட்டி | 2000 |
| நடப்பாண்டு | 9600 | | மதிப்பூதியம் | 2800 |
| எதிராண்டு | 400 | 10500 | மின்சார கட்ட | 700 |
| வி.போ.நி.வரவு | | 5200 | வி.போ.செலவு | 2600 |
| உயில் கொடை | | 2000 | வி.பொ.வாங்கி | 1900 |
| அரங்க ந.கொடை | | 2000 | **இருப்பு கீ/இ** | |
| | | | **ரொக்கம்** | **300** |
| | | | **வங்கி** | **2400** |
| | | **20700** | | **20700** |

**43.ஆ.** சரிக்கட்பட்ட லாபம் கணக்கிடுதல்

| விவரம் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| இலாபம் | 25000 | 23000 | 26000 |
| கழி:-திரும்ப நிகழா வருமானம் | 2500 | --- | --- |
| | 22500 | 23000 | 26000 |
| கூட்:-தீயினால் சேதமடைந்த சர | --- | 3500 | --- |
| **சரிக்கட்பட்ட பின் லாபம்** | **22500** | **26500** | **26000** |

சராசரி லாபம் = மொத்த லாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

= 22500+26500+26000 / 3 = 75000 / 3 = 25000

காப்பீட்டுமுனைமம் சரிகட்டுவதற்கு முன்லாபம்

= 25000-250=24750

நற்பெயர் = சராசரி லாபம் X கொ.ஆ.எ

= 24750 X 2 = **49500**

**44.அ.கும்பகோணம் கூடைப்பந்து வருவாய் செலவினக் கணக்கு**

| செலவுகள் | தொகை | வருமானம் | தொகை |
|---|---|---|---|
| மைதான வாடகை | 12000 | அரங்க வா.பெ | 6000 |
| அச்சுக் கட்டணம் | 5000 | சந்தா பெற்றது | 9000 |
| வங்கி கட்டணம் | 1000 | பா.பெ. வா.பெற் | 2000 |
| கட்டடம் மீ.காப் | 2000 | | |
| தொ.வி.போ.செ | 16000 | | |
| தணிக்கை கட்ட | 3000 | | |
| விளையா பொ.வா | 4000 | **பற்றாக்குறை** | **26000** |
| | **43000** | | **43000** |

**44.ஆ.** **முதல் க/கு**

| விவரம் | சரண் | அருண் | கரண் | விவரம் | சரண் | அருண் | கரண் |
|---|---|---|---|---|---|---|---|
| கர.முத | 3600 | 2700 | | இகொ | 60000 | 50000 | 40000 |
| க.கடன் | | | 57100 | பொதுகாப் | 6000 | 4500 | 4500 |
| | | | | சரண்.முத | | | 3600 |
| | | | | மறுமதிப்பீ | 8400 | 6300 | 6300 |
| | | | | அருண் | | | 2700 |
| **இகீஇ** | **70800** | **58100** | | | | | |
| | **74400** | **60800** | **57100** | | **74400** | **60800** | **57100** |
| | | | | **இகொ** | **70800** | **58100** | |

www.Padasalai.Net

**45.அ.** **கூட்டாளிகளின் முதல் க/கு**

| நாள் | விவரம் | பிரகதீ | நரேஷ் | நாள் | விவரம் | பிரகதீஷ் | நரேஷ் |
|---|---|---|---|---|---|---|---|
| | **இகீ/இ** | **450000** | **600000** | | இகீ/கெ | 400000 | 600000 |
| | | | | | வங்கி | 50000 | |
| | | **450000** | **600000** | | | **450000** | **600000** |
| | | | | | **இகீ/கொ** | **450000** | **600000** |

**கூட்டாளிகளின் நடப்பு முதல் க/கு**

| **விவரம்** | **பிரகதீ** | **நரேஷ்** | **விவரம்** | **பிரகதீஷ்** | **நரேஷ்** |
|---|---|---|---|---|---|
| இகீ/கெ | --- | 15000 | இகீ/கெ | 20000 | --- |
| எடுப்பு | 45000 | 60000 | லாபம் | 80000 | 120000 |
| எப்பு மீது.வட் | 2000 | 3000 | முதல் வட் | 20000 | 30000 |
| **இகீஇ** | **90000** | **110000** | சம்பளம் | | 38000 |
| | | | கழிவு | 17000 | |
| | **137000** | **188000** | | **137000** | **188000** |
| | | | **இகீ/கொ** | **90000** | **110000** |

**45.ஆ.** **முதல் க/கு**

| **விவரம்** | **சுந்தர்** | **விவேக்** | **பாண்டிய** | **விவரம்** | **சுந்தர்** | **விவேக்** | **பாண்டிய** |
|---|---|---|---|---|---|---|---|
| லாபந | 3000 | 2000 | 1000 | இகொ | 50000 | 40000 | 10000 |
| **பா.நிறை** | | | **16000** | பொகா | 18000 | 12000 | 6000 |
| **இகீஇ** | **68000** | **52000** | | மறுமதி | 3000 | 2000 | 1000 |
| | | | | | | | |
| | **71000** | **54000** | **17000** | | **71000** | **54000** | **17000** |
| | | | | **இகொ** | **68000** | **52000** | |

**இருப்புநிலைக்குறிப்பு**

| **பொறுப்புக** | **தொகை** | **தொகை** | **சொத்துக்கள்** | **தொகை** | **தொகை** |
|---|---|---|---|---|---|
| முதல் | | | நிலம் | 80000 | |
| சுந்தர் | 68000 | | கூ:- மதிப்பே | 11000 | 91000 |
| விவேக் | 52000 | 120000 | சரக்கிருப்பு | 20000 | |
| பா.நிறைவே | | 16000 | க:-குறைப்பு | 2000 | 18000 |
| கடனீந்தோ | | 14000 | கடனாளிகள் | 30000 | |
| | | | கழி:- குறைப் | 3000 | 27000 |
| | | | வங்கி<br>ரொக்க | | 14000 |
| | | **150000** | | | **150000** |

**46.அ.** எந்த ஒரு கூட்டாளிக்கும் முதல் மீது வட்டி செலுத்த வேண்டியதில்லை. எனவே ஆகாஷ் முதல் மீது வட்டி பெற உரிமை உடையவரல்ல.

2) கூட்டாளியின் எடுப்புகளுக்கு வட்டி விதிக்கக் கூடாது. ஆகையால் பாலா எடுப்பு மீது வட்டி செலுத்த வேண்டியதில்லை.

3) கூட்டாண்மை ஒப்பாவணம் பிரிவு 13 (ஆ)ன் படி இலாபம் சமமாகப் பகிரிந்தளிக்க வேண்டும்.

4) கூட்டாண்மை ஒப்பாவணம் பிரிவு 13 (அ)ன் படி எந்த கூட்டாளிக்கும் ஊதியம் வழங்க தேவையில்லை. ஆகையால் டேனியல் ஊதியம் பெற தகுதி உடையவரல்ல.

5) கூட்டாண்மை ஒப்பாவணம் பிரிவு 13 (ஈ)ன் படி கடன் மீது வட்டி ஆண்டு 6% செலுத்தப்பட வேண்டும். ஆகையால் சந்துரு தான் வழங்கிய 50000 கடனுக்கு ஆண்டுக்கு 6% சதவீத வட்டி பெறலாம்.

**46.ஆ.** **மறுமதிப்பீடு க/கு**

| விவரம் | தொ | விவரம் | தொ |
|---|---|---|---|
| அறைகலன் க/கு | 1000 | கட்டிடம் க/கு | 16000 |
| வாராஜயக்கடன் க/கு | 2500 | முதலீடுகள் க/கு | 6000 |
| பதிவுறா பொறுப்பு | 2500 | | |
| **மறுமதிப்பீடு லாபம்** | **16000** | | |
| | **22000** | | **22000** |

**முதல் க/கு**

| விவரம் | சாய் | சங்கர் | சண்மு | விவரம் | சாய் | சங்கர் | சண்மு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | இகீகொ | 48000 | 40000 | |
| இகீஇ | **58000** | **46000** | **12000** | ம.மதிப் | 10000 | 6000 | |
| | | | | வங்கி | --- | --- | 12000 |
| | **58000** | **46000** | **12000** | | **58000** | **46000** | **12000** |
| | | | | **இகொ** | **58000** | **46000** | **12000** |

**47.அ.** **குறிப்பேட்டுப் பதிவுகள்**

| **நாள்** | **விவரம்** | **பற்று** | **வரவு** |
|---|---|---|---|
| | வங்கி க/கு ப | 10000 | |
| | பிரகாஷ் முதல் க/கு | | 10000 |
| | க.வ.பெற வேண்டி க/கு ப | 1000 | |
| | மறுமதிப்பீடு க/கு | | 1000 |
| | மறுமதிப்பீடு க/கு ப | 11000 | |
| | இயந்திரம் க/கு | | 6000 |
| | அறைகலன் க/கு | | 3000 |
| | வாராஜயகடன் க/கு | | 2000 |
| | ரகு முதல் க/கு ப | 6000 | |
| | சாம் முதல் க/கு ப | 4000 | |
| | மறுமதிப்பீடு க/கு | | 10000 |

**மறுமதிப்பீடு க/கு**

| **விவரம்** | **தொ** | **விவரம்** | **தொ** |
|---|---|---|---|
| அறைகலன் க/கு | 3000 | க.பெ.வே க/கு | 1000 |
| இயந்திரம் க/கு | 6000 | | |
| வாராஜயக் கடன் | 2000 | **மறுமதிப்பீடு நட்டம்** | **10000** |
| | **11000** | | **11000** |

**47.ஆ.** **சேலம் பொழுதுபோக்கு மன் வருவாய் செலவினக் கது**

| செலவுகள் | தொ | தொ | வருமானம் | | தொகை |
|---|---|---|---|---|---|
| அஞ்சல் செல | | 1000 | சந்தா | 12500 | |
| எழுதுபொ.தொ. | 2400 | | கூட்:- பெறவே | 1000 | 13500 |
| கூட்:- வாங்கி | 300 | | பொ.பெ.வரும | | 12000 |
| | 2700 | | பல்வகை வர | | 500 |
| கழி:- வி.போ.இ | 500 | 2200 | | | |
| **உபரி** | | **22800** | | | |
| | | **26000** | | | **26000** |

**இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை | தொ | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|---|
| முதல் நிதி | 9300 | | அறைகலன் | 27500 |
| கூட்:- உபரி | 22800 | 32100 | பெ.வே.சந்தா | 1000 |
| மு.கூ.பெ.சந்தா | | 400 | எழுதுபொருள் இ | 500 |
| | | | கை ரொக்கம் | 3500 |
| | | **32500** | | **32500** |

www.Padasalai.Net